**அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம் - 2018**

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 54451 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பொது நிபந்தனைகளின் 4.09 (ஆ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்டிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசன திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை, நீர் வளச் சபை, மாகாண சபைகள் மற்றும் மின்சார சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. பெரிய அணைக்கட்டுகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு என்பவற்றிற்காக நீண்டகால பொருத்தமான ஒழுங்குகளை தாபிப்பதும் நீர் வளங்களை திட்டமிடலை முன்னேற்றுவதுமே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 11,154 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84.50 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10,956 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 83 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஒக்தோபர் 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 மே 15 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 செப்தெம்பர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| அ) | செயற்திட்ட நடவடிக்கைகள் 2018 செப்தெம்பர் 15 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் செயற்திட்ட செயற்பாடுகளை சுருக்குவதற்கு கடன் உடன்படிக்கையில் விதிக்கப்பட்ட எல்லைகளை கருத்திற்கொள்ளாமல் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் கொள்கையின் தவறான பிரயோகம் | வரிசை அமைச்சு செயலாளர் உத்தேசிக்கப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்கு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கு வரையறுத்த பதவியணியினர் மற்றும் சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளை கணக்கொழிப்பு செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ஆ) | செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஈபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்கள் ஊடாக செயற்திட்ட காலப்பகுதியின் போது ரூபா 4.37 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 160 உபகரண மற்றும் சொத்துக்கள் விடயங்களை அத்தகைய சொத்தக்களின் பயன்பாட்டுக் காலத்தை கருத்திற்கொள்ளாமல் செயற்திட்ட முகாமைத்துவ செலவினங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | கணக்கீட்டு சுத்திகரிப்பின் தவறான பிரயோகம் | தொடங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் சொத்துக்கள் பயன்பாட்டு காலத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| இ) | ரூபா 959.60 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் செயற்திட்டத்தின் நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதியப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 829.62 மில்லியன் கூட்டுத் தொகையான நேரொத்த கிரயத்துடன் உடன்பட்டிருக்கவில்லை. | மீதிகள் இணக்கம் செய்யப்படாமை | தொடங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தகவல்கள் நேரொத்த பதிவெடுகளுடன் உடன்பட்டிருக்க வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 2015 யூன் 30 வரை அமுலாக்கப்பட்ட அணைக்கட்டுப் பாதுகாப்பு நீர் வளங்கல் திட்டமிடல் செயற்திட்டம் என அழைக்கப்பட்ட முன்னைய செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் நேரத்தில் பூர்த்தியாக்காமல் விடப்பட்டிருந்த குறிப்பிடப்பட்டவற்றின் கீழ் பல அணைக் கட்டுக்களின் திருத்தம் மற்றும் ஏனைய வேலைகள் இந்த செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், உரிய வேலைகள் இந்த செயற்திட்டத்தின் காலப்பகுதி இறுதி வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் எதிபார்க்கப்பட்ட வெளியீடு பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை | தொடங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் அவசிய தேவைக்கான வெளிநாட்டு நாட்டு கடன்களின் நிதிப்பெறுகைகளை வினைத்திறாக பயன்படுத்தும் நோக்கத்துடன் செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இனங்காணப்பட வேண்டுமென வேண்டப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் செயற்திட்டங்களை அமுலாக்குவதில் இந்த அனுபவத்தை பகிவதற்கும் தேவைப்பட்டது. |
| (i) பொல்கொலல சுரங்கப் பாதையின் தேவைப்பட்ட திருத்த வேலைகளை வெளிக்கொணர்வதற்கான ஆய்வு வேலைகள் | | (i) இலங்கை மகாவலி அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்டிருக்காத காத்திருத்தல் திகதியாக பொல்கொல்ல சுரங்க பரிசோதனை அமுலாக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், இந்த அதிகாரசபை செயற்திட்டத்தின் நோக்கெல்லையிலிருந்து திரும்ப பெறப்பட்டிருந்தது. | |
| (ii) அமுலாக்கல் முகவருக்காக மதகுக் குழாய் பரிசொதனைக் கருவிகளின் கொள்வனவு | | (ii) மதகுக் குழாய் பரிசொதனை உபகரணம் கொள்வனவு செய்வதற்கான குறிபுரைகள் அமுலாக்கல் முகவரால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iii) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் புவியியல் ஆராய்ச்சி நிலையத்தின் முன்னேற்றம். | | (iii) புவியியல் ஆராய்ச்சி நிலையத்தின் முன்னேற்ற வேலைகள் காணி கிடைக்காமை பிரச்சனை காரணமாக செயற்திட்டத்தின் நோக்கெல்லையிலிருந்து மீளப்பெறப்பட்டிருந்தது. | |
| (ஆ) | ரூபா 516.821 மில்லியன் கிரயத்தில் முன்னைய செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட வரைவு அறிக்கைகள் மீது தேசிய நீர் வழங்கல் திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட மகாவலி நீர் வளங்கள் திட்டம், மன்டேனியன் ஆறு தேக்க அடிப்படை திட்டம் என்பவற்றிற்காக இந்த செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டியிருந்த எதிர்பார்க்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட சாத்தியவளக் கற்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் எதிர்பாரக்கப்பட்ட வெளியீடுகள் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை | கூறின் கீழ் இனங்காணப்பட்ட சாத்தியவள கற்கைகள் வேறு செயற்திட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பிரதியீடுகள் காரணமாக நீக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் செயற்திட்டத்தின் தேவைகள் இனங்காணப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |
| (இ) | வெளித்தரப்பினருக்கு செய்யப்பட்ட ரூபா 20.81 மில்லியன் தொகையான தோழிலாரம்பிப்பு முற்பணங்கள், அமுலாக்கல் முகவர்களிற்கு செய்யப்பட்ட ரூபா 2.94 மில்லியன் தொகையான ஏனைய முற்பணங்கள் மற்றும் வெளித் தரப்பினருக்கு செலுத்த வேண்டிய ரூபா 32.56 மில்லியன் தொகையான தீர்க்கப்படாத பிடி காசு என்பன அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலப்பகுதி முடிவுறுத்தலில் மிகுதியாகவிருந்த வேலைகள் இனங்காணப்பட்டது | சகல ஒப்பந்த கொடுப்பனவுகளும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மிகுதியான முற்பணங்களை அறவிடுவதற்கு அமுலாக்கல் முகவரால் தேவைப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பொல்கொல்லவில் இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் நீர்த்தேக்க முகமைத்துவ நிலையத்திற்காக புதிய கட்டிடம் நிர்மாணித்தல் மற்றும் இருக்கின்ற கட்டிடத்தின் புதுப்பித்தல் என்பவற்றிற்கு ரூபா 262.09 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2016 நவம்பர் 24 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இருக்கின்ற கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் கணிசமானளவின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 259.15 மில்லியன் தொகை புதிய கட்டிடத்தின் நிர்மாணத்துடன் சேர்த்து அவற்றின் மீது | பயனற்ற செலவினம் | கட்டிட புதுப்பித்தலின் கீழான வேலைகள் அமுலாக்கப் பட்டிருக்கவில்லை, ஏனென்றால், இருக்கின்ற கட்டிடம் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | சகோதர அமைப்புடன் பேரம் பெசலிற்கு முன்னரே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அனுமதிக்கப்பட்ட மேலதிக வெலைகள் என்பவற்றிற்காக செலவழிக்கப்பட்டிருந்தது.

**3.2. பயன்படுத்தாத வளங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **விளைவு** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளருடைய சிபார்சுகள்** |
| --- | --- | --- | --- |
| கொத்மலை பயிற்சி நிலையத்தின் நிர்மாண வேலைகள் ரூபா 132.84 மில்லியன் கிரயத்தில் கணிசமானளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2018 மே மாதத்தில் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பயிற்சி நிலையம் 2018 திசெம்பர் 31 வரையும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் ரூபா 9.91 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மீளாய்வாண்டின் இறுதியில் 07 மாதங்களிற்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்தது. | செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்கள் அடையப் பட்டிருக்கவில்லை. | 2018 மே மாதத்தில் பல குறைபாடுகள் இனங்காணப் பட்டிருந்ததுடன் இனங்காணப்பட்ட குறைபாடுகளை திருத்துவதில் ஒப்பந்தகாரர் ஈடுபட்டிருந்தார் என அறிவிக்கப்பட்டது. | முன்னைய குறைபாடுகளை திருத்துவதற்கும் குறித்த நோக்கங்களிற்காக வளங்களை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |